# வேலைவாய்ப்பு

## கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபை (மேல் மாகாணம்)

## அபிவிருத்தி அதிகாரி - பதவிகள் 02 (அன்றாட அடிப்படை)

அபிவிருத்தி அதிகாரி பதவிக்கு கீழே காணப்படும் தகைமைகள் உள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி : அபிவிருத்தி அதிகாரி - அன்றாட அடிப்படை**
**அன்றாட சம்பளம் : ரூ. 34870/- மாதாந்த சம்பளம் + வாழ்க்கை செலவுக் கொடுப்பனவு.**
**கல்வித் தகைமைகள் : அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் புவியியல் / சமூக விஞ்ஞானம் / விவசாயம் / சுற்றாடல் / கல்வி பற்றிய பட்டம்.**
**வயதெல்லை : 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். கூடிய வயதெல்லை உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு அல்லது அரச அல்லது மாகாண அரச சேவையின் விண்ணப்பதாரிகளுக்கு பொருந்தாது.**

**வேறு விடயங்கள் :**

01. சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளின் அடிப்படை சம்பளத்தில் 10% ஊழியர் சேமலாப நிதிக்காக அவர்களால் செலுத்தப்பட வேண்டியதுடன் 5% ஊழியர் சேமலாப நிதிக்கும் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிக்கும் அதிகார சபையினால் செலுத்தப்படும்.

02. சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிகள் நிறுவனக்கோவை, மேல் மாகாண நிதிவிதிகள், மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைகள், இலங்கை அரசினால் அல்லது மேல் மாகாண சபையினால் விதிக்கப்பட்டுள்ள அல்லது அவ்வப்போது விதிக்கப்படும் கட்டளைகள் மற்றும் விதிகளுக்கு இணங்குதல் வேண்டும்.

**சேர்த்துக்கொள்ளும் முறை :**

கழிவுப்பொருட்கள் முகாமைத்துவ அதிகார சபையின் தலைவரால் கோரப்படும் நேர்முகத் தேர்வு சபையின் முன்னிலையில் நேர்முகத் தேர்விற்கு உட்படுத்தப்படும். தகைமைகளினைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள், முறையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக அல்லது நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்படமாட்டாது. (மேல் மாகாணத்தில் பதிவு செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு கூடுதல் கவனம் செலுத்தப்படும்).

**விண்ணப்பங்களை மேற்கொள்ள வேண்டிய முறை :**

தமது விபரங்களை உள்ளடக்கி உங்களால் தயாரிக்கப்படும் விண்ணப்பத்தை 2024.06.20 அல்லது அதற்கு முன்னர், தலைவர், கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபை (மே.மா) தும்போவில, கரதியான, பிலியந்தலை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

தற்போது அரச / மாகாண அரச சேவையில் ஈடுப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் தமது சேவை தலைமையூடாக அனுப்பப்பட வேண்டியதுடன், நேர்முகத் தேர்விற்காக சமுகமளித்தல் சார்பாக எந்தக்கொடுப்பனவையும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் எந்தவிதத்திலும் நேர்முகத்தேர்வுச் சபைக்கு வற்புறுத்தல் மேற்கொள்ளல் அப்பதவி கிடைப்பதற்கு தகைமையற்றதாகக் கொள்ளப்படும்.

**தலைவர்,**
**கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபை,**
**மேல் மாகாணம்.**

**தொ.பே. இலக்கம் : 011-3056703**
**011-2613151**

2024.06.11